




சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் SIRஐ கண்டித்து சேப்பாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் நா.எழிலன், ஜெ.கருணாநிதி, எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர்கள் எஸ்.மதன் மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், நா.இராமலிங்கம்,ச.பரமசிவம் கே.ஏழுமலை, நந்தனம் மதி,எஸ்.முரளி, மற்றும் இறையன்பன் குத்தூஸ், வே.கௌதமன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், தோழமைக்கட்சி நிர்வாகிகள், தோழர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

### பிரான்சு நாட்டின் ‘செவாலியே’ விருதுபெறும்

# கலை இயக்குநர் தோட்டா தரணிக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 13–

கலை இயக்குநர் தோட்டா தரணி அவர்களுக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான ‘செவாலியே’ விருது அறிவிக்கப் பட்டிருப்பது குறித்து வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–



**ஆக்சுபோர்டில் ஒளிரும் தந்தை பெரியாரின் ஓவியத்தைத் தந்து நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்திய தோட்டா தரணி அவர்களுக்கு, பிரான்சு அரசின் உயரிய அங்கீகாரமான ‘செவாலியே’ விருது அறிவிக்கப்பட்டிருப்பது நம் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியுள்ளது!**

**அரசு கவின் கலைக் கல்லூரியில் பயின்ற தோட்டா தரணி அவர்கள், இந்தியாவில் இருந்து இவ்விருது பெற்ற மிகப்பெரும் ஆளுமைகளின் வரிசையில் இணையவுள்ளது பெருமை யளிக்கிறது. பார் போற்றும் உங்கள் சாதனைக்குப் பாராட்டுகள்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



மதுரையில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் 2100 மீட்டர் நீளத்தில் மேலமடை மேம்பாலம் கட்டப்பட்டு வரும் பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.





இராயபுரம் மண்டலம், வார்டு–57ல் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் புதியதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளி கட்டடத்தின் கட்டுமானப் பணியினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் ஆர்.பிரியா, மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில், நேற்று (12.11.2025) வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2025ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான வணிகவரி இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ். நாகராஜன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி, மற்றும் வணிகவரி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயல் பகுதியில் அராபத் ஏரியில் முதற்கட்டமாக ரூ.2 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ள புனரமைப்பு பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பார்வையிட்டார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், நாடாளுமன்ற உறுப்பினர் ச.சசிகாந்த் செந்தில் ஆவடி மேயர் கு.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா உள்பட துறை சார்ந்த அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளனர்.